IITA
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

• Post Box 6711 • 8050 Zuerich
• Tel. 044 440 20 58 • Fax 044 440 20 59
• iita@hotmail.ch • ® CH-020.6.001.634-6

# அனைத்துலகத் தமிழ்க்கலைத் தேர்வு - 2018

அன்புடன் வணக்கம்.

2009ம் ஆண்டு மீளமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் நடைபெறவுள்ள 2018ம் ஆண்டுத் தேர்விற்கான விண்ணப்பப் படிவங்களும், தேர்வு விதிமுறைகளும் இணைக்கப்பட்டுள்ளன. முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் "மாணவர் விண்ணப்ப விபரம்" என்ற படிவத்தினையும் முழுமைப்படுத்தி **தேர்வுக்கட்டணம் செலுத்திய பிரதியுடன்** 30.06.2018 இற்குமுன்னர் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகப் பணியகத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், தேர்வுக் கட்டணமும் பிந்திய விண்ணப்பமாகவே கருதப்படும்.**

**தேர்வுக்கட்டணம் செலுத்தாது அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தேர்விற்குத் தோற்றாவிடின் விண்ணப்பக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. எனவே மாணவர்கள் தேர்விற்குத்தோற்றுவதை உறுதிப்படுத்திய பின்னரே தேர்விற்கு விண்ணப்பிக்கவும்.** மாணவர்களால் தனித்து அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தரம் இரண்டிற்குமேல் தேர்விற்கு விண்ணப்பிக்கும் ஒரு மாணவர் அறிமுறைத் தேர்விற்குத் தோற்றவில்லையெனின் அம்மாணவர் செய்முறைத் தேர்வில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

தேர்வு விதிமுறைகளை மாணவர்கள் தெளிவாக அறிந்துகொள்வதற்கு இலகுவாக தேர்விற்குத் தோற்றும் அனைத்து மாணவர்களிற்கும் விண்ணப்பப்படிவத்துடன் விதிமுறையினையும் இணைத்து வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்பப்படிவங்களும், விதிமுறைகளும் மேலதிகமாகத் தேவைப்படின் பிரதிசெய்து வழங்கவும்.

**அறிமுறைத் தேர்விற்கான மீள்தேர்வு:**

கடந்தவருடம் தரம் ஆறு, தரம் ஏழு தரங்களிற்குத் தோற்றி **செய்முறைத் தேர்வில் சித்தியடைந்து** அறிமுறைத் தேர்வில் சித்தியடையாத மாணவர்கள் விரும்பின் இவ்வருடம் அறிமுறைத் தேர்விற்கு மட்டும் தோற்ற அனுமதிக்கப்படுவர். **எனினும் இம்மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ்களினைப் பெற்றுக்கொள்வதாயின் ஒரே ஆண்டிலேயே அறிமுறை, செய்முறைத்தேர்வுகளில் சித்தியடைந்திருக்கவேண்டும்.** எனவே கடந்த வருடம் தரம் ஆறு, தரம் ஏழு தேர்வுகளிற்குத்தோற்றி அறிமுறை அல்லது செய்முறைத்தேர்வுகளில் சித்தியடையாத மாணவர்கள் மீள் தேர்விற்குத் தோற்றுவதாயின் இரு தேர்வுகளிற்கும் (அறிமுறை, செய்முறை) தோற்றுவதே சிறந்தது.

**அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் தரம் ஆறு, தரம் ஏழு தேர்வுகளுக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களின் ஆசிரியர்கள் அனைவரினதும் கவனத்திற்கு**

**அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்தும் நுண்கலை அடிப்படைக் கற்கைநெறித் தேர்வுகள்.**

1. அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம், இந்திய அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து இசை (வாய்ப்பாட்டு, வயலின், வீணை) பரதம் - நடனம், மிருதங்கம் ஆகிய துறைகளிற்கான பட்டய மற்றும் பட்டப்படிப்புக்களினை மேற்கொள்ள இருக்கின்றது.

2. நுண்கலைத் துறைகளில் பட்டயம் (Diploma), மற்றும் பட்டப்படிப்புக்களினை (BFA Music, BFA Dance) மேற்கொள்வதற்கான **அடிப்படைத் தகைமையாக** அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்தும் தரம் ஆறு (Foundation 1), தரம் ஏழு (Fondation2) தேர்வுகள் அமைகின்றன.

3. வழமைபோல் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தினால் நடாத்தப்பெறும் தேர்வுகளாகவே இத்தேர்வுகள் அமையும். ஆயினும் தங்கள் மாணவர்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களாகப் பதிவுசெய்து, அவர்களால் வழங்கப்பெறும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காக தரம் ஆறு, தரம் ஏழு மாணவர்கள் தேர்வுக்கட்டணத்துடன் 100 சுவிஸ் பிராங்குகள் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்.

4. இம் மாணவர்கள் பட்டய, பட்டப்படிப்பிற்கான அடிப்படைத் தகைமையைப்பெற்று பட்டப்படிப்பினையும் மேற்கொள்ளவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அதுவே இம் மாணவர்களின் கலையாற்றலை மேலும் வளர்த்து எதிர்காலத்தில் தகைமைபெற்ற கலையாசிரியர்களாக விளங்க உதவிசெய்யும்.

5. ஆதலால், தரம் ஆறு, தரம் ஏழு ஆகியவற்றிற்கான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அடிப்படைக் கற்கைநெறிச்சான்றிதழ்களினைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள், இத்துடன் இணைக்கப்பெற்றுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகப் படிவங்கள் இரண்டினையும் முழுமைப்படுத்தி (தேர்வுக்கான படிவம், மாணவர் பதிவுப்படிவம்) அதற்கான கட்டணத்துடன், வதிவிட அனுமதிப்பத்திரப் பிரதியினையும் **4.5 x 3.5cm** அளவிலான அடையாள அட்டைக்குரியதான வண்ணப் புகைப்படம் ஒன்றினையும் இணைத்து நாடுகள் நிலைப்பிரதிநிதிகளிற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

6. அனைத்துலகத் தமிழ்க்லை நிறுவகத்தின் தரம் ஏழு தேர்வில் ஏற்கனவே சித்தியடைந்த மாணவர்கள் தங்களை அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் மாணவர்களாகப் பதிவுசெய்து அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகமும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்தும் அறிமுறைத் தேர்விற்குத் தோற்றி சித்தியடையும் சந்தர்ப்பத்தில் அடிப்படை தகைமைச் சான்றிதழ்களினைப் (Fondation2) பெற்றுக்கொள்ளமுடியும். இம்மாணவர்கள் பதிவுக்கட்டணமாக 150 சுவிஸ் பிராங்கினை செலுத்துதல் வேண்டும்.

7. அனைத்துலகத் தமிழ்க்லைத் தேர்வில் தரம் ஆறிற்கு தோற்றி சித்தியடைந்துள்ள மாணவர்கள் தரம் ஏழு (Foundation 2) தேர்விற்குத் தோற்ற முடியும்.

8. ஐரோப்பாவில் ஏதாவதொரு கலைத்தேர்வில் தரம் ஐந்து தேர்வினை நிறைவுசெய்தவர்கள் தரம் ஆறு (Foundation 1) தேர்விற்குத் தோற்றமுடியும்.

9. மேலதிக விபரங்கள் தேவைப்படின் தேர்வுப்பொறுப்பாளருடன் (077 922 03 14) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விண்ணப்பக் கட்டணம் செலுத்தவேண்டிய வங்கிக்கணக்கு விபரம்:**

**Credit Suisse**
**0839-343456-51 (BLZ) 4839**
**IBAN: CH33 0483 5034 3456 5100 0**

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

அனைத்துலகத் தமிழ்க்கலைத் தேர்வு 2018
**IITA**
**Postfach 6711**
**8050 Zürich.**

நன்றி

மேலதிக தொடர்புகட்கு : 0041 44 440 20 58
0041 77 922 03 14

நாகராஜா விஜயகுமார்
தேர்வுப் பொறுப்பாளர்
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்.
சூரிச், 12.04.2018